02.09.2024

O.S.NO.28/2023

PW1 திரு.சரவணன், த/பெ. (1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-

சாட்சி வா.த.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

தாவா சொத்து 2.50 ஏக்கர் பரப்பளவு இருக்கும். தாவா சொத்தை பிரதிவாதி பாபுக்கு வாடகைக்கு கொடுக்கவில்லை. நான் பிரதிவாதி பாபுக்கு தாவா சொத்தினை 15 ஆண்டுகள் காலத்திற்கு வாடகைக்கு பேசி வாடகைக்கு விட்டிருக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல. தற்பொழுது இந்த இடத்தில் கிரானைட் கம்பெனி நடத்துவதற்காக பிரதிவாதி 100 X 200 அடி பரப்பளவில் ஷெட் போட்டிருக்கின்றார் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. தாவா இடத்தில் பெரிய பெரிய இயந்திரங்களை எல்லாம் கொண்டுவந்து பிரதிவாதி நிறுவி இருக்கின்றார் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன்பாக, பிரதிவாதிகள் எனக்கு எதிராக வேறு ஒரு சிவில் வழக்கை தாக்கல் செய்திருக்கின்றார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு அசல் வழக்கு எண். 248/2016 என்ற எண்ணில் பூந்தமல்லி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வருகின்றது என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கில் பிரதிவாதிகள் எனக்கு எதிராக நான் 15 ஆண்டுகளுக்கு தாவா சொத்தினை பொறுத்து ஒரு லீஸ் பத்திரம் பதிவு செய்து கொடுக்கவேண்டும் என்று கோரி தாக்கல் செய்திருக்கின்றார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் பிரதிவாதிகளின் சுவாதீனத்தை இடையூறு செய்யக்கூடாது என்று ஒரு தடை உத்தரவு கோரப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறு. அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அவர் தாவா இடத்தின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு ஒரு அறிக்கையை தாக்கல் செய்திருக்கின்றார் என்று சொன்னால் அது தவறு. என்னிடம் காட்டப்படுகின்ற புகைப்படத்தில் கண்டது தான் நீதிமன்ற ஆணையாளர் தாக்கல் செய்த புகைப்பட நகல் மற்றும் அறிக்கை என்று சொன்னால் சரியல்ல. இந்த புகைப்படத்தில் காணப்படுவது என்னுடைய இடமே கிடையாது. பிரதிவாதி

தற்பொழுது என்னை இடையூறு செய்வதால் அவ்வாறு செய்யக்கூடாது என்று இந்த வழக்கை நான் தாக்கல் செய்திருக்கின்றேன். பிரதிவாதி என்னிடம் அட்வான்ஸ் கொடுத்து தாவா இடத்தில் 15வருடம் வாடகைக்கு வந்தார் என்றால் தவறு. அந்த இடத்தில் பெரிய தொழில் கூடத்தை நிறுவி தொழில் நடத்தி வருகின்றார் என்று சொன்னால் அது தவறு. தாவா இடத்தில் அவர் நிறுவிய தொழில் கூடங்கள் எல்லாம் அப்படியே இருக்கின்றது என்றாலும், தாவா இடம் பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் தான் இருந்து வருகின்றது என்று சொன்னால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்த காலத்திலும் சரி, அதற்கு முன்னாலும், வழக்கு காலத்திற்கு பின்னாலும் தாவா சொத்தில் சுவாதீனத்திலேயே இருந்தது இல்லை என்று சொன்னால் அது தவறு. நான் தாக்கல் செய்திருக்கின்ற இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.